# நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு

முதல் பக்கத் தொடர்ச்சி

மாறாக, மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில் இருந்து 5 கோடி வேலைவாய்ப்பைப் பறித்துவிட்டீர்கள். ஐக்கிய நாடுகள் சபை மட்டும் அல்லாமல், வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்ளும்போது பல முறை தமிழ் தான் தொன்மையான மொழி, திருக்குறள் மிகச்சிறந்த நூல் என்று பெருமை பேசிய பிரதமர் மோடி அவர்கள், தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்துள்ளார்? தாராளமாக நிதி ஒதுக்கீடு கிடைத்திட நடவடிக்கை எடுத்தாரா?

**குஜராத்தில் என்ன நடந்தது?**

இன்று பிரதமராக உள்ள திரு. மோடிஜி அன்று குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது என்ன நடந்தது? அகமதாபாத் பற்றி எரிந்தது. 1044 பேர் வன்முறை ,கலவரம், தீவைப்பு சம்பவங்களில் உயிர் இழந்தனர். 2500 பேர் காணாமல் போனார்கள். எண்ணற்ற வீடுகள் தாக்கப்பட்டு அப்பாவி மக்கள் காயமடைந்தனர். அவர்களில் பெரும்பாலோர் சிறுபான்மை சமூகம் சார்ந்த மக்கள்.

இந்தக் கலவரங்கள் பற்றி பல்வேறு நடுநிலை அமைப்புகள் நடத்திய ஆய்வுகள் கண்டறிந்து வெளிக்கொணர்ந்த உண்மைகள் என்ன? இந்தக் கலவரங்கள் மதக் கலவரம் எனவும், குறிப்பிட்ட சமுதாய மக்கள் மீது முன்கூட்டியே திட்டமிட்டு ஏவிவிடப்பட்ட தாக்குதல் எனவும் குற்றம் சாட்டப்பட்டதே. மேலும், அப்போது குஜராத்தின் முதல்வராக இருந்த திரு.மோடி அவர்கள் இந்தக் குற்றச் செயல்களை கண்டுகொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

**ராஜ தர்மத்தை மீறக் கூடாது - வாஜ்பாய் அறிவுரை**

இருபது ஆண்டுகள் முன்பு குஜராத்தில் இத்தகைய வன்முறைகள் அரங்கேற்றப்பட்டதைக் கண்டு உலகமே கண்டித்தது. அப்போது பிரதமராக இருந்த திரு.வாஜ்பாய் அவர்கள், குஜராத் கலவரப் பகுதிகளைப் பார்வையிட்ட பின் அன்று முதலமைச்சர் பொறுப்பில் இருந்த உங்களைப் பார்த்து சொன்னது என்ன? புண்ணியமான எல்லைக்கோடாக உள்ள ராஜ தர்மத்தை நீங்கள் மீறக் கூடாது என்றல்லவா அறிவுரை வழங்கினார்.

மாபெரும் தலைவரான மறைந்த பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அன்று வழங்கிய அறிவுரையை நீங்கள் பின்பற்றவில்லை. மறந்துவிட்டீர்கள். அதனால்தான் இன்று மணிப்பூர் மதக் கலவரத்தில் பற்றி எரிகிறது. பெரும்பான்மை மத மக்கள் சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். 140 உயிர்கள் பலியாகிவிட்டன. 65000 பழங்குடி இன மக்கள் வீடுகளை இழந்து உயிர் பாதுகாப்பு தேடி காடுகளிலும், அண்டை மாநிலத்திலும் அகதிகளாக தஞ்சம் அடைந்து தவிக்கின்றனர். கொடுமையான இந்த மத, இனக் கலவரம் மணிப்பூர் மாநிலத்தில் பேயாட்டம் போட்ட நேரத்தில் பிரதமர் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்றுவிட்டார். ஆனால், பாதிக்கப்பட்ட மாநில மக்களைப் போய் பார்க்கவில்லை. ஆறுதல் கூறவில்லை. மணிப்பூர் பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, அம்மாநில முதலமைச்சர், வன்முறை கும்பல் இரண்டு இளம் பெண்களை நிர்வாணமாக ஊர்வலமாக நெடுந்தூரம் நடத்திச் சென்று மானபங்கப்படுத்தப்பட்ட கொடுமை குறித்து கேட்ட போது “இது என்ன? இதைப்போல நூறு சம்பவங்கள் நடந்துள்ளன” என்று மனிதாபிமானம் அற்ற வகையில் கூறியுள்ளார். அதுபற்றிக்கூட பிரதமர் கண்டு கொள்ளாதது வேதனைக்குரியது.

**மணிப்பூர் கலவரம்!**

ஒட்டுமொத்த உலகமே மணிப்பூர் வன்முறைக் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்றமும், இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்றமும் அங்கே மணிப்பூர் தொடர்பாக நடைபெற்ற விவாதங்களில் பிரதமர் மோடியையும் அவரது கட்சியையும் கடுமையான மொழியில் சாடியுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் 6 எம்.பி.க்கள் குழு தாங்கள் விடுத்துள்ள கோரிக்கையில் “இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நிகழ்ந்துள்ள வன்முறை, இனம் மற்றும் மத அடிப்படையில், குறிப்பாக பெரும்பான்மை இந்து மைத்தி சமுதாய மக்களுக்கும், கிறித்தவ குக்கி பழங்குடி மக்களுக்கும் இடையே நடந்துள்ளது. திரும்பத் திரும்ப சுழற்சியாக நடந்த வன்முறைச் சம்பவங்களால் பல தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அடித்து நொறுக்கப்பட்டன, எண்ணற்ற சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 100 பேர் உயிரிழந்தனர், 40,000 பேர் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளனர்” என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

**நரேந்திர தத்தா ( சுவாமி விவேகானந்தர்) கூறியது என்ன?**

இந்து மதத்தை உலகுக்கு அறிமுகம் செய்த நரேந்திர தத்தா என்ற இயற்பெயர் கொண்ட விவேகானந்தர், அமெரிக்கா நாட்டின் சிகாகோ நகரில் 130 வருடங்கள் முன்னால் நடைபெற்ற உலக மதங்களின் பேரவையில், சகோதரர்களே சகோதரிகளே என்று அவையோரைப் பார்த்து விளித்து உரையாற்றும்போது என்ன கூறினார்? மனித குலத்தின் அனைத்து பிரிவு மக்களையும் ஏற்கும் பண்பும் பொறுமையும் நிறைந்த நாட்டில் இருந்து வருகிறேன் என்றல்லவா குறிப்பிட்டார்! “எங்கள் நாடு உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்வேறு மத நம்பிக்கை கொண்டவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகி வந்த அனைவருக்கும் புகலிடம் தந்து ஏற்றுக் கொண்ட பெருமைக்கு உரியது. அது மட்டுமல்ல. அனைத்து மதங்களும் உண்மையானவை என்பதையும் உணர்ந்து ஏற்றுள்ள நாடு எங்கள் நாடு. மதப் பாகுபாடும், முரட்டு நம்பிக்கையும் இவற்றின் வழித்தோன்றலான மதவெறியும் எளிய மக்களை மீண்டும் மீண்டும் ரத்தம் சிந்த வைத்து இந்த அழகிய உலகின் பல்வேறு பகுதிகளை மனிதகுலம் சிந்திய குருதி வெள்ளத்தால் நனைத்துள்ளது. இந்தக் கொடுமை ஒழிய வேண்டும்” என்று எச்சரிக்கை விடுத்து சென்றுள்ளார் விவேகானந்தர் என்று அறியப்பட்ட நரேந்திர தத்தா. விவேகானந்தர் எது நடக்கக் கூடாது என்று அறிவுறுத்தினாரோ, அச்சப்பட்டாரோ அந்தக்கொடுமை இப்போது மணிப்பூரிலும், அரியானாவிலும், முன்பு குஜராத்திலும் நரேந்திர மோடி புகழ் இந்துத்துவ ஆட்சியில் நடைபெற்றுள்ளது.

**தமிழ்நாடு கவர்னரைத் திரும்பப் பெறுக**

தமிழ்நாட்டில் ஒருவர் இருக்கிறார். அவர் யாரென நான் பெயர் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் அனைவருக்கும் தெரியும். அவர் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருந்து, முதலமைச்சர், அமைச்சர்கள் ஏனைய கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் அமர்ந்து இருக்கும்போதே தேசியகீதம் இசைக்கப்படும் முன்பே அவையைவிட்டு வெளியேறினார். தேசியகீதத்துக்கு ஆளுநர் தரும் மரியாதை இதுதானா? இப்படிப்பட்ட ஆளுநரின் செயல்களை உள்துறை அமைச்சர் கண்டிப்பதுடன் அவரை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு தி.மு.க. ஆதரவு**

எனவே, இத்தகைய சூழலில் இந்த அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டபடியால், அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது.

எனது உரையை நிறைவு செய்யும் முன்னர் ஒரு திருக்குறளை, அதாவது குறள் எண்.474ஐ குறிப்பிட விரும்புகிறேன்.

“அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்”

இவ்வாறு கழகப் பொருளாளரும். திருப்பெரும்புதூர் மக்களவை உறுப்பினரும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி. ஆர்.பாலு மக்களவையில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினார்.

---

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

## ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கருத்துக்கேட்புக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

*புதுக்கோட்டை, ஆக. 10 -*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*



*கழக தொண்டர்களின் வேண்டுகோளுக்கிணங்க கருத்துகளை கேட்கும் பொருட்டு நாளை (11.8.2023 -வெள்ளிக் கிழமை) ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள ஒன்றியங்களில் கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி கழகத் தொண்டர்களை நேரில் சந்தித்து கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற இருக்கிறது. மேற்படி கூட்டத்தில் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கை மற்றும் கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*11.08.2023 திருவரங்குளம் கிழக்கு ஒன்றியம், காலை 9.00 மணி குலமங்களம் வடக்கு, காலை 10.30 வடகாடு,. திருவரங்குளம் மேற்கு ஒன்றியம் மதியம் 12 மணி, அரசடிப்பட்டி 4 ரோடு, மதியம் 3 மணி வேங்கிடகுளம், திருவர ங்குளம் தெற்கு ஒன்றியம் மாலை 4.30 மணி வல்லத்திராக்கோட்டை, மாலை 6.00மணிகுளவாய்ப்பட்டி.*

*இவ்வாறு தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

---


## முத்துப்பேட்டை ஒன்றியம் மாங்குடி பாலு மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

*திருவாரூர், ஆக 10 -*

*திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஒன்றியம் மாங்குடி ஊராட்சியைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி வியாபாரி பாலு என்கிற பாலசுப்பிரமணியன் இயற்கை எய்தினார். அன்னாருக்கு வயது 75.*

*மாங்குடி பகுதியில் பல்வேறு எதிர்ப்புகளிலும் இடையூறுகளிலும் பாடுபட்டு தி.மு.க.வை மாங்குடி சுற்றுவட்டார பகுதிகளில் வளர்த்தவர். கழக நிகழ்வுகள் அனைத்திலும் பங்கெடுத்துக்கொண்டவர். மறைந்த பாலசுப்பிரமணியனுக்கு வேலுக்கண்ணு என்கிற மகனும் , ஜெயந்தி, லதா என்கிற மகள்களும் உள்ளனர்.*



*கிளை செயலாளர், ஒன்றியப் பிரதிநிதி, நிலவள வங்கி இயக்குனர் உள்ளிட்ட பொறுப்புக்களை வகித்து வந்த பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ். விஜயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்ப. ஆடலரசன், ஆர்.எஸ். பாண்டியன், , மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ். கார்த்திக், ஒன்றிய செயலாளர் இரா.மனோகரன்,பால. ஞானவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் தங்கள் இரங்கலை தெரிவித்தனர்.*

*அன்னாரின் இறுதிச் சடங்கு 09.08.23 புதன் அன்று அவரது சொந்த ஊரான மாங்குடியில் நடைபெற்றது.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் உடுமலைப்பேட்டையில் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், நகர கழக செயலாளர் செ.வேலுசாமி முன்னிலையில் பொள்ளாச்சி சாலை மாரியம்மன் கோவில் எதிரில் இருந்து அமைதி ஊர்வலமாகச் சென்று உடுமலைப்பேட்டை பேருந்து நிலையம் எதிரில் வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

# ‘Throw The Tyrants Out’

## (இந்தக் கொடுங்கோலர்களைத் தூக்கி எறியுங்கள்)

## “சிலந்தி” கட்டுரை

..... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

வன்முறைகளில் 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து விட்டதாகக் கூறப்பட்டாலும் சாவு எண்ணிக்கை இன்னும் பெருமளவில் இருக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது!

பா.ஜ.க. ஆளும் ஹரியானாவும் இப்போது மதக் கலவரத்தால் மிரண்டு அஞ்சிக் கிடக்கிறது!

அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் மதச்சார்பு வெறியாட்டங்களை (அரசு நினைத்திருந்தால்) தடுத்திருக்க முடியும்! விஸ்வஹிந்து பரிஷத் எனும் சங்பரிவார் அமைப்பு நடத்திய ஊர்வலத்தில், பசு பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த மோனுமனேசார் எனும் இந்து வெறியன் ஒருவன் (இரண்டு முஸ்லிம்களை கொலை செய்துவிட்டு தலைமறைவாகியவன்) தானும் கலந்து கொள்ளப்போவதாக அறிவித்து நடந்த ஊர்வலம் அது! அவன் கலந்து கொள்வதாக ஊர்வலம் நடத்த இருக்கும் தேதிக்கு இரு தினங்கள் முன்பே அறிவித்து சமூக ஊடகங்களில் அந்தச் செய்தி பரவுகிறது. ஹரியானாவை ஆளும் பி.ஜே.பி. அரசு இதுகுறித்து கவலைப்படவே இல்லை!

முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் பகுதிகள் வழியாக அந்த இந்து அமைப்பின் ஊர்வலம் செல்ல அனுமதிக்கப்படுகிறது. வன்முறை வெடிக்கிறது; இரு தரப்பாரும் வன்முறைக்குக் காரணத்தை ஒருவர் மீது ஒருவர் சுமத்திக் கொள்கின்றனர். ஆனால், ஹரியானாவை ஆளும் பா.ஜ.க. அரசு அந்த ஊர்வலத்துக்கு எப்படி அனுமதி தந்தது? தேடப்படும் குற்றவாளி ஒருவன் கலந்து கொள்ளப் போவதாக அறிவித்து சமூக ஊடகங்களில் இரு தினங்களாக செய்தி பரப்பிய பின்னரும் ஹரியானா அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது ஏன்? இதுபோன்ற கேள்விகளை “டைம்ஸ் ஆப் இந்தியா” போன்ற ஏடுகளே எழுப்புகின்றன!




**இவை எல்லாம் எதனைத் தெளிவாகக் காட்டுகின்றன என்பதை நாடு உணர வேண்டும். எத்தனை ஆயிரம் இந்திய மக்கள் தங்கள் இன்னுயிரைப் பலிகொடுத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை; அவர்களின் உடமைகள், குடியிருப்புகள் தீக்கிரையானாலும் பரவாயில்லை; எங்கும் மரண ஓலங்கள். கற்பழிப்புக் கதறல்கள், சிசுவதைகள், இந்த நாட்டுப் பெண்களை நிர்வாணமாக்கி மானபங்கப் படுத்துதல் போன்ற சம்பவங்கள் தொடர்கதையானாலும் எங்களுக்கு எந்தவித மனக்கிலேசமும் கிடையாது!**



**இந்தியாவை இந்து நாடாக அதாவது இந்துக்களுக்கு மட்டுமான நாடாகவே மாற்றுவோம்!**

**இது வேத பூமி, சனாதான தர்மமே இங்கு நிலை நிறுத்தப்பட வேண்டும். வர்ணாசிரமக் கொள்கை ஒன்றையே இந்த நாடு கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறித் திரிகிறது ஒரு கூட்டம்!**

இந்தக் கூட்டமும் அதன் ஆதரவாளர்களும் மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வந்து விட்டால் இன்றைய இந்திய அரசியல் சட்டம் இருக்காது.

கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் குறிப்பிட்டபடி தமிழ்நாடே இருக்காது! அதுமட்டுமல்ல; இந்த குள்ளநரிக் கூட்டத்தின் ஆட்சியில், இந்தியாவின் ஜனநாயகம் கேள்விக் குறியாகி நிற்கிறது.

பொருளாதாரம் சிதைந்து பண மதிப்பு இழந்து எல்லா மட்டங்களிலும் விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கின்றன!

ஏழை எளிய மக்கள் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் தள்ளிட விழி பிதுங்கிக் கிடக்கின்றனர்!

“சீனி சக்கரை சித்தப்பா; ஏட்டில் எழுதி நக்கப்பா” எனும் விதத்தில் நாட்டில் நொந்து நூலாகி கிடக்கும் மக்கள் முன், நாளும் விதவிதமாக உடை உடுத்தி, பலவித தொப்பிகள் அணிந்து நமது நாட்டின் பிரதமர் வித்தை காட்டிக் கொண்டிருக்கிறார்.

**“அச்சே தின் ஆனே வாலே ஹை....”** என முழங்கி, ஆட்சியை பிடித்து, ஒன்பது ஆண்டுகள் கடந்து 10 ஆவது ஆண்டிலும் அதே பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிறார். இந்திய மக்கள், நடந்து கொண்டிருக்கும் பி.ஜே.பி. கூட்டணி ஆட்சியில் பல முனைகளிலும் பட்டிடும் அவதிகளைக் காணும்போது, அமெரிக்காவில் ஒருகாலத்தில் ஒலித்த தொடரே நினைவிலாடுகிறது!

**நாகரிகம் கருதி, அந்த சொற்றொடரை சிறிது மாற்றி அமைத்து** Throw The Tyrants Out .

**‘இந்தக் கொடுங்கோலர்களைத் தூக்கி எறியுங்கள்’ - என்ற நிலையில் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை அணுகுவோம்!**